**O.S.No.166/2017**

**Date:10.08.2018**

பிரதிவாதி தரப்பு சாட்சி 1 - கணேசன், த-பெ.மகாலிங்கம்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் எனக்கு எழுதப் படிக்கத் தெரியும். சர்வே எண்.260-8ல் மொத்தம் 1 ஏக்கர் 8 செண்டு என்றால் சரிதான். அது ராமதாஸ் நாயுடு என்பவருக்குப் பாத்தியமாகியிருந்தது என்றால் சரிதான். அவர் முதல் மனைவிமகன் கிருஷ்ணசாமி நாயுடுவுக்கு கிழக்குப் பக்கம் 12 செண்டு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்குப் பக்கம் மூன்றாவதுமனைவி சரோஜா, மகன் ராஜாவுக்கு 96 செண்டு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 96 செண்டில் சரோஜா மற்றும் மகன் ராஜா ஆகிய இருவரும் 27.11.1998ல் கோமதியம்மாளுக்கு 12 செண்டு கிரையம் கொடுத்துள்ளனர் என்றால் தெரியாது. அதில் மேற்குப் பக்கம் 12 செண்டு என்பதற்குப் பதிலாக கிழக்குப் பக்கம் 12 செண்டு என்று தவறுதலாக கிரயப் பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்தகிரயப் பத்திரத்தில் மேற்குமாலில் ஓடை என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான், ராஜாவிடம் 10.01.2007ல் பொது அதிகாரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அவர்களுக்கு 84 செண்டு மட்டும் பாத்தியமாகியுள்ள நிலையில், நான் 96 செண்டிற்கு பொது அதிகாரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொது அதிகாரம் வாங்குவதற்கு முன்பாக வில்லங்க சான்றிதழ் 96 செண்டுக்கு பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதில் கோமதி அம்மாளுக்கு 12 செண்டு கிரையமாகியிருந்தது தெரிய வந்ததா என்றால் இல்லை. மொத்தம் 1 ஏக்கர் 8 செண்டில் யார், யார் எவ்வளவு விஸ்தீரணத்தில் இருக்கிறார்கள் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் 18..01.2007ல் என் மனைவி பெயருக்கு 96 செண்டை கிரையம் எழுதிக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரயப் பத்திரம், பவர் பத்திரம் இரண்டிலும் மேற்குப்பக்கம் கோமதி அம்மாள் இடம் என்று காண்பித்துள்ளேன் என்றால் இல்லை. பொது அதிகார ஆவணம் மற்றும் என் மனைவி பெயரிலான கிரய ஆவணத்தில் மேற்குப் பக்கம் என்ன நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. நான் இந்த இரண்டு பத்திரங்களிலும் மேற்குப் பக்கம் கோமதி அம்மாள் இடம் என்ற காண்பித்துள்ளதால்தான் தற்போது ஞாபகம் இல்லை என்று

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணசாமி நாயுடுவிக்குப் பாத்தியப்பட்ட கிழக்குப்புற 12 செண்டினை பசுபதி என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. நான் கிரையம் கொடுத்துள்ளது என் மனைவி பாண்டியம்மாளுக்கு என்றால் சரிதான். 1 ஏக்கர் 8 செண்டு, பாண்டியம்மாள், கோமதி, பசுபதி ஆகிய மூவருக்கும் பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரு ஏக்கர் 8 செண்டில் வடபுறம் நான்குவழிச் சாலைக்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் நானும், இழப்பீட்டுத் தொகை வாங்கியுள்ளேன் என்றால் பாண்டியம்மாள் பெயரில் உள்ள இடத்திற்கு வாங்கியுள்ளேன். 1 ஏக்கர் 8 செண்டிற்கு மேற்குப் பக்கம் ஓடை உள்ளது என்றால் தெரியாது. கோமதி அம்மாள் கிரையம் வாங்கிய இடத்தில் வடக்குப் பக்கம் 7 செண்டு சாலைக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றாலும், மீதம் 5 செண்டு உள்ளது என்றாலும் தெரியாது. பாண்டியம்மாளுக்குப் பாத்தியப்பட்ட இடத்தில் சாலைக்காக ஆர்ஜிதம் செய்தது போக மீதம் உள்ள இடம் 43 ½ செண்டு என்றால் அளக்கவில்லை. இனிமேல்தான் அளக்க வேண்டும். ஆனால் 56 செண்டு இருப்பதாக தெரிவித்து, முருகேசன் என்பவருக்கு பாண்டியம்மாள் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் கைவசம் தற்போது எந்த இடமும் இல்லை என்றால் 2 ஏக்கர் 76 செண்டு பாண்டியம்மாள் பெயரில் உழவடை உள்ளது. உழவடை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. உழவடை பட்டா உள்ளதா என்றால் உள்ளது. முருகேசனுக்கு 56 செண்டு கிரையம் கொடுத்த போது, அனுபவமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு சர்வே எண்.260-8ல் தற்பொழுது டவுன் சர்வே எண்.5-9ல் கட்டுப்பட்ட எந்த நிலமும் என் கைவசம் இல்லை என்றால் சரியல்ல. கோமதி அம்மாள் அவருக்குப் பாத்தியப்பட்ட 5 செண்டை இந்த வாதி அழகுவிற்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் தெரியாது. வழக்கு யார் தாக்கல் செய்துள்ளது என்றால் அழகு என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார், என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் தெரியாது. சாடசி மீண்டும் அவர்கள் இடம் என்று வழக்க தாக்கல் செய்துள்ளார். அவர்கள் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டு, எங்கள் தரப்பில் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளனர் என்ற விபரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். தற்போது சர்வே எண் வாதிக்கு சர்வே எண்.5-9பி என்று ஏற்பட்டு, அவரது பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் மனைவி பெயருக்கு 5-9ஏ என்று சர்வே எண் ஒதுக்கப்பட்டு, பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தெரியும். ஓடைக்கு சர்வே எண்.5-8 என்று புதிய சர்வே எண்

கொடுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நான்கு வழி சாலைக்கு இந்த சர்வே எண்ணில் எடுக்கப்பட்ட இடத்திற்கு சர்வே எண்.5-13 என்று வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நான் பாண்டியம்மாளுக்குப் பாத்தியப்பட்ட சொத்து முழுமையாக விற்கப்பட்டுள்ளது என்றாலும், சர்வே எண்.260-8ல் கட்டுப்பட்ட இடத்தில் எந்த ஒரு பகுதியும் எனக்குப் பாத்தியப்பட்டதல்ல என்றாலும், உழவடை பாத்தியதையும் எனக்குக் கிடையாது என்றாலும், நான்குமாலில் தவறான திசைகள் சொல்லப்பட்டதன் அடிப்படையில் நான் வீண் தாவா செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. எனது ஆவணங்களில் நான் கோமதியம்மாளுக்கும், வாதக்கும் இடம் பாத்தியப்பட்டுள்ளதை ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தவறான முறையில் வாதியின் சொத்தை அபகரிப்பதற்காக எவ்விதமான அடிப்படையான ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் இன்றி, வீணாக தாவா செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதி கோரியுள்ளபடி தீர்ப்பு செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.